4. அறிக்கைகள் அளித்தல்

அவை உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. தனபால் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2011–2012, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011–2012 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னல்படும் ஏழைகளின் துயர் நீக்கி, ஒடுக்கப்பட்டோர் உயர்வுபெற கை கொடுத்து, தடைகள் எது வரினும் தகர்த்துத் துகளாக்கி, தமிழகத்தை முன்னெடுத்துச் செல்லும், (மேசையைத் தட்டும் ஒலி) தன்னிகரில்லா தனிப் பெரும் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்திடவும், (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் தமிழகம் இழந்துவிட்ட பெருமைகளை மீட்டெடுக்கவும், (மேசையைத் தட்டும் ஒலி) சீர்மிகு திட்டங்கள் பல தந்து, சிறப்பாக அவற்றை நிறைவேற்றி, கூர்ந்த அறிவுத் திறத்தால், தேர்ந்த நிர்வாகத் திறனால், இந்திய நாடே உற்று நோக்கும் வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிச் சக்கரத்தைத் திறம்பட சுழற்றி இந்திய நாட்டிற்கே முன்னுதாரணமாகத் திகழ்கின்ற மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதங்களில் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.*